# பட்டயம்

மலர் – 06 ஏப்ரல் – 2010 இதழ் – 6

Date of Issue : 01-04-2010

Place of Publication : 86 / 222H, Main Road,
Panagudi - 627 109.
Tirunelveli District, Tamil Nadu.

Volume : 6

Issue : 6 Price Per Copy : Rs.5.00




**"BEHOLD, I MAKE ALL THINGS NEW" - REV 21/5**

## ஓசன்னா ஆலய வெளியீடு

www.hosannahchurch.org

"இந்த ஆலயத்தை மகிமையினால் நிறையப் பண்ணுவேன்" (ஆகாய்2:7)

# B£¬Vo L¥Rm

**அன்பார்ந்த கர்த்தருடைய பிள்ளைகளே!**

**நம்முடைய தேவன் ஜீவனுள்ள தேவன்: மாறாத தேவன். அவர் நமக்கு அருளிய வார்த்தைகள் மாறாதவைகள். அவருடைய வார்த்தைகளை நாம் பார்க்கும் போது அவைகளில் வாக்குத்தத்தங்கள் உண்டு: வாழ ஆலோசனைகள் உண்டு: ஒழுக்க நெறிகள் உண்டு: ஆறுதல் வசனங்கள் உண்டு: விசுவாசம் ஊட்டும் வார்த்தைகள் உண்டு: மனிதர்களின் உண்மை சரித்திரங்கள் உண்டு.**

**இவைகள் மட்டும் அல்ல, எச்சரிப்பின் வார்த்தைகளும் உண்டு. நாம் எச்சரிப்பின் வார்த்தைகளால் எச்சரிக்கப்பட்டு கீழ்படிந்தாலொழிய வாக்குத்தத்தங்களை பெற்றுக் கொள்ள முடியாது: நித்திய வாழ்வையும் பெற முடியாது.**

**இக்கடைசி காலத்தில் ஜனங்களை எச்சரித்து வழிகாட்டுகிற, வழி நடத்துகிற உண்மையான ஊழியர்கள் எழும்பிட ஜெபியுங்கள். அப்போது தேசத்திலே அநேகர் கர்த்தரை நோக்கித் திரும்புவார்கள்: கர்த்தருடைய ஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொள்வார்கள்.**

**கீழ்கண்ட எச்சரிப்பு வார்த்தைகளை பயத்துடன், விசுவாசத்துடன் தியானிப்போமாக: கீழ்ப்படிவோமாக: உன்னத ஆசீர்களை ஆண்டவர் இயேசுவிடமிருந்து பெறுவோமாக.**

**கர்த்தருடைய நித்திய ஆசீர்கள் உங்கள் மேலும் உங்கள் சந்ததிகள் மேலும் என்றென்றும் நிலைப்பதாக!**

**ஆமென்.**

**இப்படிக்கு,**

**ஆசிரியர். பிரின்ஸ்டன் ஜாய்**

1. பதரையோ அவியாத அக்கினியால் சுட்டெரிப்பார் - மத். 3/12.
2. தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக் கொள்பவன் நியாயத் தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான் - மத். 5/22.
3. தன் சகோதரனை வீணனென்று சொல்லுகிறவன் ஆலோசனைக் சங்கத் தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான். - மத். 5/22.
4. தன் சகோதரனை மூடனே என்று சொல்லுகிறவன் எரிநரகத்துக்கு ஏதுவாயிருப்பான் - மத். 5/22.
5. கள்ளத்தீர்க்கத்தரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள். - மத். 7/15.
6. நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு, அக்கினியிலே போடப்படும். - மத். 7/19.
7. மனுஷரைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள்; உங்களை ஆலோசனைச் சங்கங்களுக்கு ஒப்புக் கொடுத்து தங்கள் ஜெப ஆலயங்களில் உங்களை வாரினால் அடிப்பார்கள். - மத். 10/17.
8. கோராசினே! உனக்கு ஐயோ! பெத்சாயிதாவே! உனக்கு ஐயோ! உங்களில் செய்யப்பட்ட பலத்த செய்கைகள் தீருவிலும் சீதோனிலும் செய்யப்பட்டிருந்ததானால் அப்பொழுதே இரட்டுடுத்திச் சாம்பலில் உட்கார்ந்து மனந்திரும்பியிருப்பார்கள் - மத். 11/21.
9. எந்த மனுஷனால் இடறல் வருகிறதோ அவனுக்கு ஐயோ! - மத்.18/7.
10. இந்த சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் - மத். 18/10.
11. மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ! மனுஷர் பிரவேசியாதபடி பரலோக ராஜ்யத்தை பூட்டி போடுகிறீர்கள். நீங்கள் அதில் பிரவேசிக்கிறதுமில்லை; பிரவேசிக்கப் போகிறவர்களைப் பிரவேசிக்க விடுகிறதுமில்லை - மத். 23/13.
12. மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, பார்வைக்காக நீண்ட ஜெபம் பண்ணி, விதவைகளின் வீடுகளைப் பட்சித்துக் போடுகிறீர்கள். இதினிமித்தம் அதிக ஆக்கினையை அடைவீர்கள் - மத். 23/14.
13. மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, ஒருவனை உங்கள் மார்க்கத்தானாக்கும்படி சமுத்திரத்தையும், பூமியையும் சுற்றித் திரிகிறீர்கள். அவன் உங்கள் மார்க்கத்தானான போது அவனை உங்களிலும் இரட்டிப்பாய் நரகத்தின் மகனாக்குகிறீர்கள். - மத். 23/15.
14. குருடரான வழிகாட்டிகளே உங்களுக்கு ஐயோ! - மத். 23/16.

15. மாயக்காரராகிய வேதபாரகரே, பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, நீங்கள் ஒற்றலாமிலும், வெந்தயத்திலும், சீரகத்திலும் தசமபாகம் செலுத்தி, நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித்தவை களாகிய நீதியையும், இரக்கத்தையும், விசுவாசத்தையும் விட்டு விட்டீர்கள் - மத். 23/23.

16. மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, போஜனபானபாத்திரங்களின் வெளிப்புறத்தைச் சுத்தமாக்குகிறீர்கள். உட்புறத்திலோ அவைகள் கொள்ளையினாலும் அநீதத்தினாலும் நிறைந்திருக்கிறது. - மத். 23/25.

17. காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று. மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள் - மாற்கு. 1/15.

18. ஒருவன் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகத் தூஷணம் சொல்வானாகில் அவன் என்றென்றைக்கும் மன்னிப்படையாமல் நித்திய ஆக்கினைக்குள்ளாயிருப்பான் - மாற்கு. 3/29.

19. பரிசேயருடைய புளித்தமாவைக் குறித்தும், ஏரோதின் புளித்தமாவைக் குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள் - மாற்கு. 8/15.

20. விதவைகளின் வீடுகளைப் பட்சித்து, பார்வைக்கு நீண்ட ஜெபம் பண்ணுகிற வேதபாரகரைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். அவர்கள் அதிக ஆக்கினையை அடைவார்கள் - மாற்கு. 12/40.

21. ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் - மாற்கு. 13/5.

22. உன்னிலுள்ள வெளிச்சம் இருளாகாதபடிக்கு எச்சரிக்கையாயிரு. - லூக்கா. 11/35.

23. பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். - லூக்கா. 12/15.

24. அவரை விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரே பேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராத படியினால் அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று - யோவான். 3/18.

25. எல்லா கபடமும் எல்லா பொல்லாங்கும் நிறைந்தவனே பிசாசின் மகனே, நீதிக்கெல்லாம் பகைஞனே, கர்த்தருடைய செம்மையான வழிகளைப் புரட்டுவதில் ஓயமாட்டாயோ? இதோ, இப்பொழுதே கர்த்தருடைய கை உன் மேல் வந்திருக்கிறது. சில காலம் சூரியனை காணாமல் குருடனாயிருப்பாய் - அப். 13/10,11.

26. பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்து எச்சரிக்கையாயிருங்கள் - அப். 20/28.

27. சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கி வைக்கிய மனுஷருடைய எல்லா வித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாக தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. - ரோமர். 1/18.

28. சண்டைக்காரராயிருந்து, சத்தியத்திற்குக் கீழ்படியாமல் அநியாயத்திற்குக் கீழ்ப்படிந்திருக்கிறவர்களுக்கோ உக்கிரகோ பாக்கினை வரும் - ரோமர் . 2/8.

29. பொல்லாங்கு செய்கிற எந்த மனுஷ ஆத்துமாவுக்கும் உபத்திரவமும் வியாகுலமும் உண்டாகும். - ரோமர். 2/9.

30. எவர்கள் நியாயப்பிரமாணத்துக்குட்பட்டவர்களாய் பாவஞ் செய்கிறார்களோ அவர்கள் நியாயப் பிரமாணத்தினாலே ஆக்கினை நீர்ப்படைவார்கள். - ரோமர். 2/12.

31. அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்கிறவன் தேவனுடைய நியமத்திற்கு எதிர்த்து நிற்கிறான். அப்படி எதிர்த்து நிற்கிறவர்கள் தங்களுக்குத் தாங்களே ஆக்கினையை வருவித்துக் கொள்ளுகிறார்கள். - ரோமர். 13/2.

32. அவர்களில் சிலர் வேசித்தனம் பண்ணி, ஒரே நாளில் இருப்பத்து மூவாயிலம் பேர் விழுந்து போனார்கள். அது போல நாமும் வேசித்தனம் பண்ணாதிருப்போமாக - I கொரி 10/8.

33. அவர்களில் சிலர் கிறிஸ்துவைப் பரீட்சை பார்த்து, பாம்புகளால் அழிக்கப்பட்டார்கள். அதுபோல நாமும் கிறிஸ்துவைப் பரீட்சை பாராதிருப்போமாக. - I கொரி 10/9.

34. அவர்களில் சிலர் முறுமுறுத்து சங்காரக்காரனாலே அழிக்கப்பட்டார்கள். அது போல நீங்களும் முறுமுறுக்காதிருங்கள். - I கொரி 10/10.

35. தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன் - I கொரி 10/12

36. நீங்கள் ஏற்றுக் கொண்ட சுவிசேஷத்தையல்லாமல் வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக் கடவன் - கலா 1/9.

37. உங்களை கலக்குகிறவன் எப்படிப்பட்டவனாயிருந்தாலும், தனக்கேற்ற ஆக்கினையை அடைவான். - கலா. 5/10.

38. நீங்கள் ஒருவரையொருவர் கடித்துப் பட்சித்தீர்களானால் அழிவீர்கள். அப்படி ஒருவராலொருவர் அழிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். - கலா. 5/15.

39. நீயும் சோதிக்கப்படாதபடிக்கு உன்னைக் குறித்து எச்சரிக்கையாயிரு. - கலா 6/1.

40. விபசாரக்காரனாவது, அசுத்தனாவது, விக்கிரகாராதனைக் காரனாகிய பொருளாசைக்காரனாவது தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யத்திலே சுதந்திரமடைவதில்லை. இப்படிப் பட்டவைகளினிமித்தமாக கீழ்படியாமையின் பிள்ளைகள் மேல் தேவகோப்பாக்கினை வரும் - எபேசியர் 4/5,6.

41. நாய்களுக்கு எச்சிக்கையாயிருங்கள் - பி□ப்பியர் 3/2.

42. பொல்லாத வேலையாட்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள் - பி□3 / 2.

43. சுன்னத்துக்காரருக்கு எச்சரிக்கையாயிருங்கள் - பி□3 / 2.

44. லௌகீக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும், ஒருவனும் உங்களைக் கொள்ளை கொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையா யிருங்கள். - கொலோ 2/8.

45. உன்னைக் குறித்தும், உபதேசத்தைக் குறித்தும் எச்சரிக்கையாயிரு. - I தீ 4/16.

46. அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும், பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்து கொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், தேவன் தாமே காட்சி கொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்வோம்? - எபிரேயர் 2/4.

47. ஜீவனுள்ள தேவனைவிட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாச முள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராதபடிக்கு நீங்கள எச்சரிக்கையாயிருங்கள் - எபி. 3/12.

48. மறுதலித்துப் போனவர்கள் தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறபடியால், மனந்திரும்புதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியம் - எபி. 6/6.

49. முள்செடிகளையும் முள்பூண்டுகளையும் முளைப்பிக்கிற நிலமோ தகாததாயும் சபிக்கப்படுகிறதற்கேற்றதாயுமிருக்கிறது. சுட்டெரிக்கப் படுவதே அதின் முடிவு - எபி. 6/8.

50. தேவனுடைய குமாரனைக் கால்கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன்

எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் - எபி. 10/29.

51. ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது. பயங்கரமாயிருக்குமே - எபி. 10/31.

52. ஒருவனும் வேசிக்கள்ளனாகவும் ஒரு வேளைப் போஜனத்துக்காகத் தன் சேஷ்டபுத்திரபாகத்தை விற்றுப் போட்ட ஏசாவைப் போலச் சீர்கெட்டவனாகவும் இராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள். - எபி. 12/16.

53. பேசுகிறவருக்கு நீங்கள் செவி கொடுக்க மாட்டோமென்று விலகாதபடி எச்சரிக்கையாயிருங்கள். ஏனெனில் பூமியிலே பேசினவருக்குச் செவி கொடுக்க மாட்டோமென்று விலகினவர்கள் தப்பிப் போகாமருக்க, பரலோகத்திருந்து பேசுகிறவரை நாம் விட்டு விலகினால் எப்படித் தப்பிப் போவோம்? - எபி. 12/25.

54. ஐசுவரியவான்களே, கேளுங்கள், உங்கள் மேல் வரும் நிர்ப்பந்தங்களினிமித்தம் அலறி அழுங்கள். - யாக்கோபு 5/1.

55. இதோ, உங்கள் வயல்களை அறுத்த வேலைக்காரருடைய கூ□ உங்களால் அநியாயமாய்ப் பிடிக்கப்பட்டுக் கூக்குரடுகிறது. - யாக்கோபு. 5/4.

56. கள்ளத்தீர்க்கதரிசிகளும் ஜனங்களுக்குள்ளே இருந்தார்கள். அவர்கள் கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுகளைத் தந்திரமாய் நுழையப் பண்ணி, தங்களைத் கிரயத்துக்குக் கொண்ட ஆண்டவரை மறுதத்து, தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக் கொள்ளுவார்கள். - II பேதுரு. 2/1.

57. கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களைச் சோதனையினின்று இரட்சிக்கவும், அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளானவர்களாக நியாயத்தீர்ப்பு நாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார். - II பேதுரு. 2/9.

58. இவர்களோ பிடிபட்டழிக்கப்படுவதற்கு உண்டான புத்தியற்ற மிருக ஜீவன்களைப் போலத் தங்களுக்குத் தெரியாதவைகளைத் தூஷித்து, தங்கள் கேட்டிலே கெட்டழிந்து, அநீதத்தின் பலனை அடைவார்கள். - II பேதுரு. 2/12.

59. இவர்கள் தண்ணீரில்லாத கிணறுகளும், சுழல்காற்றினால் அடியுண்டோடுகிற மேகங்களுமாயிக்கிறார்கள். என்றென்றைக்கு முள்ள காரிருளே இவர்களுக்கு வைக்கப்பட்டிருக்கிறது. - II பேதுரு. 2/17.

60. இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவினாலே உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பினவர்கள் மறுபடியும் அவைகளில் சிக்கிக் கொண்டு ஜெயிக்கப்பட்டால், அவர்களுடைய பின்னிலைமை முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும். - II பேதுரு. 2/20.

61. கல்லாதவர்களும் உறுதியில்லாவர்களும் மற்ற வேத வாக்கியங்களைப் புரட்டுகிறது போலத் தங்களுக்குக் கேடுவரத்தக்கதாக இவைகளையும் புரட்டுகிறார்கள். - II பேதுரு. 3/16.

62. அக்கிரமக்காரருடைய வஞ்சகத்திலே நீங்கள் இழுப்புண்டு, உங்கள் உறுதியிருந்து விலகி விழுந்து போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். - II பேதுரு. 3/17.

63. உங்கள் செய்கைகளின் பலனை இழந்து போகாமல், பூரண பலனைப் பெறும் படிக்கு எச்சரிக்கையாயிருங்கள் - II யோவான் 8.

64. தமக்கு விரோதமாய் அவபக்தியுள்ள பாவிகள் பேசின கடின வார்த்தைகளெல்லாவற்றினிமித்தமும் அவர்களைக் கண்டிக்கிற தற்கும், ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடும் கூடக் கர்த்தர் வருகிறார். - யூதா. 15.

65. நீ இன்ன நிலமையிருந்து விழுந்தாயென்பதை நினைத்து மனம் திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக. இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து நீ மனந்திரும்பாத பட்சத்தில் உன் விளக்குத் தண்டை அதனிடத்தினின்று நீக்கி விடுவேன். - வெளி. 2/5.

66. நீ மனந்திரும்பு, இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, என் வாயின் பட்டயத்தால் அவர்களோடே யுத்தம் பண்ணுவேன் - வெளி. 2/19.

67. நீ கேட்டுப் பெற்றுக் கொண்ட வகையை நினைவு கூர்ந்து அதைக் கைக்கொண்டு மனந்திரும்பு. நீ விழித்திராவிட்டால், திருடனைப் போல் உன் மேல் வருவேன் - வெளி. 3/3.

68. இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் நான் சாட்சியாக எச்சரிக்கிறதாவது : ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால், இந்தப்புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளை தேவன் அவன் மேல் கூட்டுவார். - வெளி. 22/18.

69. ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து ஏதையாகிலும் எடுத்துப் போட்டால், ஜீவ புஸ்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும், இந்த புஸ்தகத்தில் எழுதப்பட்டவை களிலிருந்தும் அவனுடைய பங்கை தேவன் எடுத்துப் போடுவார்.- வெளி. 22/19.

70. நீ நன்மை செய்யாதிருந்தால் பாவம் வாசற்படியில் படுத்திருக்கும் - ஆதி. 4/7.

71. அந்த ஆத்துமா என உடன்படிக்கையை மீறின படியால், தன் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டு போவான் - ஆதி. 17/14.

72. நீ அவைகளை நமஸ்கரிக்கவும், சேவிக்கவும் வேண்டாம். உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன். - யாத். 20/5.

73. உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக. கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனைத் தண்டியாமல் விடார் - யாத். 20/7.

74. விதவையையும் திக்கற்ற பிள்ளையையும் ஒடுக்கினால் கோபங்கொள்வார் - யாத். 22/22-24.

75. அவர் சமுகத்தில் எச்சரிக்கையாயிருந்து அவர் வாக்குக்குச் செவி கொடு. அவரைக் கோபப்படுத்தாதே. உங்கள் துரோகங்களை அவர் பொறுப்பதில்லை - யாத். 23/21.

76. இந்த முறையின் படியே தைலங்கூட்டுகிறவனும், அதில் எடுத்து அந்நியன் மேல் வார்க்கிறவனும், தன் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டு போகக்கடவன் - யாத். 30/33.

77. ஓய்வுநாளை ஆசரிப்பீர்களாக. அது உங்களுக்குப் பரிசுத்தமானது. அதை பரிசுத்தக்குலைச்சலாக்குகிறவன் கொலையுண்ணக் கடவன். அதிலே வேலை செய்கிற எந்த ஆத்துமாவும் தன் ஜனத்தின் நடுவில் இராதபடிக்கு அறுப்புண்டு போவான் - யாத். 31/14.

78. உன் கண்கள் கண்ட காரியங்களை நீ மறவாதபடிக்கும், உன் ஜீவனுள்ள நாளெல்லாம் அவைகள் உன் இருதயத்தை விட்டு நீங்காத படிக்கும் நீ எச்சரிக்கையாயிரு - உபா. 4/10.

79. உங்கள் கண்களை வானத்திற்கு ஏறெடுத்து, உங்கள் தேவனாகிய கர்த்தர் வானத்தின் கீழெங்கும் இருக்கிற எல்லா ஜனங்களுக்கு

ஏற்படுத்தின வானத்தின் சர்வ சேனைகளாகிய சந்திர சூரிய நட்சத்திரங்களை நோக்கி அவைகளைத் தொழுது சேவிக்க இணங்காதபடிக்கும், உங்கள் ஆத்துமாக்களைக் குறித்து மிகவும் எச்சரிக்கையாயிருங்கள். - உபா. 4/19.

80. உங்கள் தேவனாகிய கர்த்தர் வேண்டாம் என்று விலக்கின எவ்வித சாயலான விக்கிரகத்தையும் உங்களுக்கு உண்டாக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். - உபா. 4/23.

81. நீ அடிமைப்பட்டிருந்த வீடாகிய எகிப்து தேசத்திருந்து உன்னைப் புறப்படப்பண்ணின கர்த்தரை மறவாதபடிக்கு எச்சரிக்கையாயிரு. - உபா. 6/12.

82. உன் தேவனாகிய கர்த்தரை மறவாதபடிக்கும், நான் இன்று உனக்கு விதிக்கிற அவருடைய கற்பனைகளையும் நியாயங்களையும் கட்டளைகளையும் கைக்கொள்ளமற்போகாதபடிக்கும் எச்சரிக்கை யாயிரு - உபா. 8/11.

83. என் சாமர்த்தியமும் என் கைப்பெலனும் இந்த ஐசுவரியத்தை எனக்குச் சம்பாதித்தது என்று நீ உன் இருதயத்தில் சொல் கொள்ளாமலும் இருக்க எச்சரிக்கையாயிரு. - உபா. 8/17.

84. உங்கள் இருதயம் வஞ்சிக்கபடாமலும், நீங்கள் வழி விலகி அந்நிய தேவர்களைச் சேவித்து அவர்களை நமஸ்கரியாமலும் இருக்கும்படி எச்சரிக்கையாயிருங்கள் - உபா. 11/16.

85. கண்ட இடமெல்லாம் நீ உன் சர்வாங்க தகனபக ளை இடாதபடிக்கு எச்சரிக்கையாயிரு - உபா. 12/13.

86. நீ அவர்களைப் பின்பற்றிச் சிக்கிக்கொள்ளாதபடிக்கும், இந்த ஜாதிகள் தங்கள் தேவர்களைச் சேவித்தபடி நானும் சேவிப்பேன் என்று சொல் அவர்கள் தேவர்களைக் குறித்துக் கேட்டு விசாரியாத படிக்கும் எச்சரிக்கையாயிரு. - உபா. 12/30.

87. விடுதலை வருஷமாகிய ஏழாம் வருஷம் கிட்டியிருக்கிறதென்று சொல் உன் இருதயத்திலே பொல்லாத நினைவு கொண்டு, உன் ஏழைச் சகோதரனுக்குக் கொடாமல் மறுத்து, அவன் மேல் வண்கண் வைக்காதபடிக்கும், அவன் உன்னைக் குறித்து கர்த்தரை நோக்கி அபயமிடாதபடிக்கும் எச்சரிக்கையாயிரு. - உபா. 15/9.

88. உங்கள் தேவனாகிய கர்த்தரில் அன்புகூரும்படி உங்கள் ஆத்துமாக்களைக் குறித்து மிகவும் எச்சரிக்கையாயிருங்கள் - யோசுவா. 23/11.

89. நீ திராட்சரசமும் மதுபானமும் குடியாதபடிக்கும், தீட்டானது ஒன்றும் புசியாத படிக்கும் எச்சரிக்கையாயிரு. - நியாயாதிபதிகள். 13/4.

90. நீங்கள் கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்படியாமல், கர்த்தருடைய வாக்குக்கு விரோதமாய்க் கலகம் பண்ணினீர்களானால், கர்த்தருடைய கை உங்கள் பிதாக்களுக்கு விரோதமாயிருந்தது போல உங்களுக்கும் விரோதமாயிருக்கும் - 1 சாமு. 12/15.

91. நான் துன்மார்க்கனாயிருந்தால் எனக்கு ஐயோ! - யோபு. 10/15.

92. அக்கிரமத்துக்குத் திரும்பாதபடிக்கு எச்சரிக்கையாயிரு. -யோபு. 36/21.

93. ராஜாக்களே, உணர்வுடையுங்கள்; பூமியின் நியாயாதிபதிகளே, எச்சரிக்கையாயிருங்கள் - சங். 2/10.

94. அவன் மனந்திரும்பாவிட்டால் அவர் தம்முடைய பட்டயத்தைக் கருக்காக்குவார்; அவர் தம்முடைய வில்லை நாணேற்றி அதை ஆயத்தப்படுத்தியிருக்கிறார். - சங். 7/12.

95. இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், வனாந்தரத்தில் கோபம் மூட்டின போதும் சோதனை நாளிலும் நடந்தது போல உங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தாதேயுங்கள். - சங். 95/8.

96. பிறனுடைய மனைவியிடத்தில் பிரவேசிப்பவனும், அப்படியே அவளைத் தொடுகிற எவனும் ஆக்கினைக்குத் தப்பான் - நீதி. 6/29.

97. நீங்கள் மனம் பொருந்திச் செவி கொடுத்தால், தேசத்தின் நன்மையை புசிப்பீர்கள்; மாட்டோம் என்று எதிர்த்து நிற்பீர்களாகில் பட்டயத்துக்கு இரையாவீர்கள். - ஏசாயா. 1/19, 20.

98. அவர்கள் தங்கள் பாவத்தை மறைக்காமல் சோதோம் ஊராரைப் போல வெளிப்படுத்துகிறார்கள். அவர்கள் ஆத்துமாவுக்கு ஐயோ! தங்களுக்கே தீமையை வருவித்துக் கொள்கிறார்கள். - ஏசாயா. 3/9.

99. துன்மார்க்கனுக்கு ஐயோ! அவனுக்குக் கேடு உண்டாகும் - ஏசாயா. 3/11.

100. தாங்கள் மாத்திரம் தேசத்தின் நடுவில் வாசமாயிருக்கும்படி மற்றவர்களுக்கு இடமில்லா மற்போகு மட்டும், வீட்டோடே வீட்டைச் சேர்த்து, வயலோடே வயலைக் கூட்டுகிறவர்களுக்கு ஐயோ! - ஏசாயா. 5/8.

101. சாராயத்தை நாடி அதிகாலமே எழுந்து, மதுபானம் தங்களைச் சூடாக்கும்படி, தரித்திருந்து, இருட்டிப் போகுமளவும் குடித்துக் கொண்டேயிருக்கிறவர்களுக்கு ஐயோ! - ஏசாயா. 5/11.

102. தீமையை நன்மையென்றும், நன்மையை, தீமையென்றும் சொல்லி இருளை வெளிச்சமும், வெளிச்சத்தை இருளுமாகப் பாவித்து, கசப்பைத் தித்திப்பும், தித்திப்பைக் கசப்புமென்று சாதிக்கிறவர்களுக்கு ஐயோ - ஏசாயா. 5/20.

103. தங்கள் பார்வைக்கு ஞானிகளும், தங்கள் எண்ணத்துக்குப் புத்திமான்களுமாயிருக்கிறவர்களுக்கு ஐயோ! - ஏசாயா. 5/21.

104. பரிதானத்திற்காகக் குற்றவாளியை நீதிமானாகத் தீர்த்து, நீதிமானின் நியாயத்தை அவனுக்கு விரோதமாய் புரட்டுகிறவர்களுக்கு ஐயோ! - ஏசாயா. 5/23.

105. அநியாயமான தீர்ப்புகளைச் செய்கிறவர்களுக்கும், கொடுமையான கட்டளைகளை எழுதுகிறவர்களுக்கும் ஐயோ! - ஏசாயா. 10/2.

106. எப்பிராயீமுடைய வெறியரின் பெருமையான கிரீடத்துக்கு ஐயோ! - ஏசாயா. 28/1.

107. தங்கள் ஆலோசனையைக் கர்த்தருக்கு மறைக்கும் படிக்கு மறைவிடங்களில் ஒளித்து, தங்கள் கிரியைகளை அந்தகாரத்தில் நடப்பித்து, நம்மைக் காண்கிறவன் யார்? நம்மை அறிகிறவர் யார்? என்கிறவர்களுக்கு ஐயோ! - ஏசாயா. 29/15.

108. பாவத்தோடே பாவத்தைக் கூட்டும் படி என்னை அல்லாமல் ஆலோசனை பண்ணி, என் ஆவியை அல்லாமல் தங்களை மூடிக் கொள்ளப் பார்க்கிறவர்களும், என் வாக்கைக் கேளாமல் பார்வோனின் பெலத்தினாலே பெலக்கவும், எகிப்தின் நிழலிலே ஒதுங்கவும் வேண்டும் என்று எகிப்துக்குப் போகிறவர்களுமாகிய முரட்டாட்டமுள்ள புத்திரருக்கு ஐயோ! - ஏசாயா. 30/1, 2.

109. சகாயமடையும் படி இஸ்ரவேலுடைய பரிசுத்தரை நோக்காமலும், கர்த்தரைத் தேடாமலும், எகிப்துக்குப் போய், குதிரைகள் மேல் நம்பிக்கை வைத்து இரதங்கள் அநேகமாயிருப்பதினால் அவைகளை நாடி, குதிரை வீரர் மகா பெலசாலிகளாயிருப்ப தினால் அவர்களை நம்பிக் கொண்டிருக்கிறவர்களுக்கு ஐயோ! - ஏசாயா. 31/1.

110. கொள்ளையிடப்படாதிருந்தும், கொள்ளையிடுகிறவனும், துரோகம் பண்ணாதிருக்கிறவர்களுக்குத் துரோகம் பண்ணுகிறவனுமாகிய உனக்கு ஐயோ! - ஏசாயா. 33/1.

111. தன்னை உருவாக்கினவரோடே, வழக்காடுகிறவனுக்கு ஐயோ! - ஏசாயா. 45/9.

112. தகப்பனை நோக்கி ஏன் ஜநிப்பித்தாய் என்றும், தாயை நோக்கி ஏன் பெற்றாய் என்றும் சொல்லுகிறவனுக்கு ஐயோ! - ஏசா. 45/10.

113. எனக்கு மனமடிவுண்டாக அந்நிய தேவர்களுக்குப் பான பலிகளை வார்க்கிறார்கள். அவர்கள் வானராக்கினிக்குப் பணியாரங்களைச் சுடும் படி பிள்ளைகள் விறகு பொறுக்குகிறார்கள். பிதாக்கள். நெருப்பு மூட்டுகிறார்கள்; ஸ்திரீகள் மாப்பிசைகிறார்கள். ஆதலால் இதோ என் கோபமும் என் உக்கிரமும் இந்த ஸ்தலத்தின் மேலும், மனுஷர் மேம் மிருகங்கள் மேலும், வெளியில் மரங்கள் மேலும் பூமியின் கனிகள் மேலும் ஊற்றப்படும். அது அவியாமல் எரியும். - எரேமி. 7 / 18,20.

114. நீங்கள் அவனவன் தன்தன் சிநேகிதனுக்கு எச்சரிக்கையாயிருங்கள் - எரே. 9 / 4.

115. உன் விபசாரங்களையும், உன் கனைக்குதல்களையும் வெளியே மேடுகளின் மேல் நீ பண்ணின வேசித்தனத்தின் முறைகேடு களாகிய உன் அருவருப்புகளையும் நான் கண்டேன். எருசலேமே உனக்கு ஐயோ! நீ சுத்திகரிக்கபட மாட்டாயா? - எரே. 13 / 27.

116. மனுஷன் மேல் நம்பிக்கை வைத்து, மாம்சமானதைத் தன் புயபலமாக்கிக் கொண்டு கர்த்தரை விட்டு விலகுகிற இருதயமுள்ள மனுஷன் சபிக்கப்பட்டவன் - எரே. 17/5.

117. அநியாயமாய் ஐசுவரியத்தைச் சம்பாதிக்கிறவன் முட்டையிட்டு அவயங்காத்தும் குஞ்சுபொறிக்காமற்போகிற கவுதாரிக்குச் சமானமாயிருக்கிறான். அவன் தன் பாதி வயதிலே அதைவிட்டு, தன் முடிவிலே மூடனாயிருப்பான் - எரே. 17/11.

118. ஓய்வு நாளில் உங்கள் வீடுகளிலிருந்து சுமையை வெளியே கொண்டு போகாதபடிக்கும், ஒரு வேலையையும் செய்யாத படிக்கும் உங்கள் ஆத்துமாக்களுக்காக எச்சரிக்கையாயிருந்து, நான் உங்கள் பிதாக்களுக்குக் கட்டளையிட்டபடி ஓய்வு நாளைப் பரிசுத்தமாக்குங்கள் - எரேமியா. 17/22.

119. அநீதியினால் தன் வீட்டையும், அநியாயத்தினாலே தன் மேலறைகளையும் கட்டி, தன் அயலான் செய்யும் வேலைக்கு கூலி கொடாமல்,அவனைச் சும்மா வேலை கொள்ளுகிறவனுக்கு ஐயோ! - எரேமியா. 22 /14.

120. என் மேய்ச்சலின் ஆடுகளைக் கெடுத்துச் சிதறடிக்கிற மேய்ப்பர்களுக்கு ஐயோ! - எரேமி. 23 /1.

121. சாகவே சாவாய் என்று நான் துன்மார்க்கனுக்கு சொல்லுகையில், நீ துன்மார்க்கனைத் தன் துன்மார்க்கமான வழியில் இராதபடிக்கு

எச்சரிக்கும் படியாகவும், அவனை உயிரோடே காக்கும் படியாகவும், அதை அவனுக்குச் சொல்லாமலும், நீ அவனை எச்சரிக்காமலும் இருந்தால் அந்த துன்மார்க்கர் தன் துன்மார்க்கத்திலே சாவான். அவன் இரத்தப்பழியையோ உன் கையிலே கேட்பேன்-எசே. 3 /28.

122. தாங்கள் ஒன்றும் தரிசியாதிருந்தும் தங்களுடைய ஆவியின் ஏவுதலைப் பின்பற்றுகிற மதிகெட்ட தீர்க்கதரிசிகளுக்கு ஐயோ! - எசே. 13 /3.

123. ஆத்துமாக்களை வேட்டையாடும் படிக்குச் சகல கைகளுக்கும் தமூவணைகளைத் தைத்து, அந்தந்த வயதுள்ளவர்களுடைய தலைக்கும் தலையணைகளை உண்டு பண்ணுகிறவர்களுக்கு ஐயோ! - எசே.13/ 18.

124. சிறுமையும் எளிமையுமானவனை ஒடுக்கி, கொள்ளைக் காரனாயிருந்து, அடைமானத்தைத் திரும்பக் கொடாமல், நரகலான விக்கிரகங்களுக்கு நேராக தன் கண்களை ஏறெடுத்து, அருவருப்பானதைச் செய்து வட்டிக்குக் கொடுத்து, பொ▯சை வாங்கினால் அவன் பிழைப்பானோ? அவன் பிழைப்பதில்லை. இந்த எல்லா அருவருப்புகளையும் செய்தானே.அவன் சாகவே சாவான். அவன் இரத்தபழி அவன் மேல் இருக்கும். - எசே. 18/12.

125. இரத்தம் சிந்திய நகரத்துக்கு ஐயோ! - எசே. 24 /9.

126. நீதிமான் தன் நீதியை விட்டுத் திரும்பி, அநியாயஞ்செய்தால், அவன் அதினால் சாவான் - எசே. 33/18.

127. தங்களையே மேய்க்கிற இஸ்ரவே▯ மேய்ப்பருக்கு ஐயோ! - எசே. 34/2.

128. அவன் பாகால்களுக்குத் தூபங்காட்டி, தன் நெற்றிப் பட்டங்களினாலும் தன் ஆபரணங்களினாலும் தன்னை சிங்காரித்துக் கொண்டு தன் நேசரைப் பின் தொடர்ந்து என்னை மறந்து போன நாட்களினிமித்தம் அவளை விசாரிப்பேன். - ஓசியா. 2 / 13.

129. நெறிதவறினவர்கள் மிகுதியும் வதை செய்கிறார்கள். அவர்கள் எல்லாரையும் நான் தண்டிப்பேன் - ஓசியா. 5 /2.

130. நீ உன் தேவனுடைய வேதத்தை மறந்தாய்; ஆகையால் நானும் உன் பிள்ளைகளை மறந்து விடுவேன். - ஓசியா. 4 /6.

131. அவர்கள் என் ஜனத்தின் பேரில் சீட்டுப் போட்டு, ஆண் குழந்தைகளை வேசிப்பணையமாகக் கொடுத்து, மதுபானம்

பண்ணும் படி பெண் குழந்தைகளைத் திராட்சரசத்துக்குக் கிரயமாகக் கொடுத்ததினிமித்தம் அங்கே அவர்களோடு வழக்காடுவேன். - யோவேல் 3/3.

132. சீயோனிலே நிர்விசாரமாயிருக்கிறவர்களும் சமாரியாவின் பர்வதத்தை நம்பிக் கொண்டிருக்கிறவர்களும், ஜாதிகளின் தலைமையென்னப்பட்டு இஸ்ரவேல் வம்சத்தார் தேடி வருகிறவர்களுமாகிய உங்களுக்கு ஐயோ! ஆமோஸ் 6/1.

133. அக்கிரமத்தை யோசித்து, தன் படுக்கைகளின் மேல் பொல்லாப்பு செய்ய எத்தனம் பண்ணித் தங்கள் கையில் வல்லமை இருக்கிறபடியினால், விடியற்காலமாகிறபோது அதை நடப்பித்து, வயல்களை இச்சித்துப் பறித்துக் கொண்டு, வீடுகளை இச்சித்து எடுத்துக் கொண்டு புருஷனையும் அவன் வீட்டையும், மனுஷனையும் அவன் சுதந்திரத்தையும் ஒடுக்குகிறவர்களுக்கு ஐயோ! - மீகா. 2 / 1,2.

134. இரத்தப்பழிகளின் நகரத்திற்கு ஐயோ! அது வஞ்சகத்தினாலும் கொடுமையினாலும் நிறைந்திருக்கிறது - நாகூம். 3 / 1.

135. தன்னுடையதல்லாததைத் தனக்காகச் சேர்த்துக் கொள்ளுகிற வனுக்கு ஐயோ! - ஆபகூக். 2 / 6.

136. தீமையின் வல்லமைக்குத் தப்ப வேண்டுமென்று தன் கூட்டை உயரத்திலே வைக்கும் படிக்கு, தன் வீட்டுக்குப் பொல்லாத ஆதாயத்தைத் தேடுகிறவனுக்கு ஐயோ! - ஆபகூக். 2 / 9.

137. இரத்தப்பழிகளாலே பட்டணத்தைக் கட்டி, அநியாயத்தினாலே நகரத்தைப் பலப்படுத்துகிறவனுக்கு ஐயோ! - ஆபகூக். 2 / 12.

138. தன் தோழருக்குக் குடிக்கக் கொடுத்துத் தன் துருத்தியை அவர்களண்டையில் வைத்து, அவர்களுடைய நிர்வாணங்களைப் பார்க்கும் படிக்கு, அவர்களை வெறிக்கப்பண்ணுகிறவனுக்கு ஐயோ! - ஆபகூக் 2 / 15.

139. மரத்தைப் பார்த்து விழியென்றும், ஊமையான கல்லைப் பார்த்து எழும்பு என்றும் சொல்லுகிறவனுக்கு ஐயோ! - ஆபகூக். 2 / 19.

140. மந்தையைக் கைவிடுகிற அபத்தமான மேய்ப்பவனுக்கு ஐயோ! பட்டயம் அவன் புயத்தின் மேலும் அவன் வலது கண்ணின் மேலும் வரும். அவன் புய முழுவதும் சூம்பிப் போகும். அவன் வலது கண் முற்றிலும் இருள் அடையும் - சகரியா. 11 / 17.

141. ஒருவனும் தன் இளவயதின் மனைவிக்குத் துரோகம் பண்ணாதபடிக்கு, உங்கள் ஆவியைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் - மல்கியா 2 / 15.

142. தள்ளிவிடுதலை நான் வெறுக்கிறேன் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்கிறார். அப்படிப்பட்டவன் கொடுமையினால் தன் வஸ்திரத்தை மூடுகிறான் என்று சேனைகளின் கர்த்தர் சொல்கிறார். ஆகையால் நீங்கள் துரோகம் பண்ணாமல் உங்கள் ஆவியைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். - மல்கியா. 2 / 16.

## YÛNolTj§u úUp ùYt±

### ஜெபம் - 1

### அந்தி கிறிஸ்து ஆவிகளைச் கட்டெடுரித்திடும் கர்த்தாவே!

1. சமுத்திரத்திலிருந்து எழும்பி வரும் மிருகம் (அந்தி கிறிஸ்து ஆவி) கட்டிப்போடப் படுவதாக. - வெளி. 13 / 1.
2. அதன் 7 தலைகள் நசுங்குவதாக. - வெளி. 13 / 1.
3. அதன் 10 கொம்புகள் பிடுங்கப் படுவதாக - வெளி. 13 / 1.
4. அதன் 10 முடிகள் விழுவதாக. - வெளி. 13 / 1.
5. அதன் தூஷணங்களைக் கட்டிப் போடும் - வெளி. 13 / 6.
6. அந்தி கிறிஸ்து ஆவிக்கு வலுசர்ப்பம் பண்ணும் ஒத்தாசைகள் வாய்க்காமல் போவதாக - வெளி. 13 / 2.
7. அதன் பெருமைகளைக் கட்டிப் போடும் - வெளி. 13 / 5.
8. தேவ தூஷணங்களைக் கட்டிப் போடும் - வெளி. 13 / 6.
9. தேவ வாசஸ்தல தூஷணங்களை கட்டிப் போடும் - வெளி. 13 / 6.
10. பரலோகில் வாசமாயிருப்பவர்களை தூஷிப்பதைக் கட்டிப் போடும் - வெளி. 13 / 6.
11. அந்தி கிறிஸ்துக்களால் வருகின்ற சிறையிருப்புகள் மாறுவதாக. - வெளி. 13 / 7.
12. அந்தி கிறிஸ்து ஆவிகளையும், அந்தி கிறிஸ்துக்களையும் சிறையிருப்பில் வைத்திடும். - வெளி. 13 / 10.
13. சாத்தானின் பட்டயங்கள் வாய்க்காமல் போவதாக. - வெளி. 13 /10.
14. கள்ளத்தீர்க்கதரிசன ஆவிகளைக் கட்டிப் போடும் - வெளி. 13 /11.

15. அந்திகிறிஸ்துக்களுக்கு ஒத்தாசையாக உள்ள கள்ளத்தீர்க்க தரிசிகளைக் கட்டிப் போடும், கர்த்தாவே! - வெளி. 13 / 12.
16. அந்தி கிறிஸ்து வழிபாடு, மிருக சொரூப வழிபாடு யாவையும் கட்டிப் போடும் - வெளி. 13 / 15.
17. கர்த்தாவே! அந்திக்கிறிஸ்துக்கள் எங்கள் மேல் ஆளுகை செய்ய முடியாது போவார்களாக. - I யோ. 4 / 4.
18. அந்திகிறிஸ்துக்களின் துர்க்கிரியைகளை அழித்திடும்.
19. அந்திகிறிஸ்துவின் சிங்காசனத்திற்கு விரோதமாக கர்த்தரின் யுத்தங்கள் நடப்பதாக.
20. வலுசர்ப்பம், அந்தி கிறிஸ்து, கள்ள தீர்க்கத்தரிசி சம்பந்தப்பட்ட அற்புதம் செய்யும் ஆவிகள் யாவும் சுட்டெரிக்கப்படுவதாக - வெளி. 13 / 13.
21. அந்திகிறிஸ்து ஆவிக்கு விரோதமாய் கர்த்தரின் வாயின் சுவாசம் கடந்து செல்வதாக. - II தெச. 2 / 8.
22. கர்த்தாவே! அந்தி கிறிஸ்துக்கள் மேலே ஜெயம் தந்திடும் -Iயோ.4/ 4.
23. அந்திகிறிஸ்து ஆவிகள் சம்பந்த 7 ராஜாக்கள், 10 ராஜாக்களுக்கு விரோதமாக ராஜாதி ராஜா இயேசு யுத்தம் செய்வாராக. - வெளி. 17 / 10 - 12.
24. அந்தி கிறிஸ்துக்கள் மகாபாபிலோனுக்குப் பண்ணும் ஒத்தாசைகள் யாவும் அழிவதாக.
25. மகாபாபிலோன முழுகிப் போவதாக. - எரே. 51 /64.

## ஜெபம் - 2

## வலுசர்ப்பம் மேல் வெற்றி பெறும் ஸ்தீரியாக மாற்றும்

1. கர்த்தாவே! நீதியின் சூரியனே! உம்மை அணிந்தவனாய், உம்மை உயர்த்துபவனாய், உம்மை மகிமைப் படுத்துபவனாய் என்னை மாற்றும் - வெளி. 12 / 1.
2. உமது அன்பை வெளிப்படுத்தும் கருவியாக மாற்றும்.
3. உமது வல்லமைகளை வெளிப்படுத்தும் கருவியாக மாற்றும்.
4. உமது ஞானங்களை வெளிப்படுத்தும் கருவியாக மாற்றும்.
5. உமது வார்த்தைகளை வெளிப்படுத்தும் கருவியாக மாற்றும்.
6. கர்த்தாவே! 12 நட்சத்திரங்கள் என்னில் ஜொலிப்பதாக.
1. அன்பு 2. சந்தோஷம் 3. சமாதானம் 4. நீடிய பொறுமை 5. தயவு 6. நற்குணம் 7. விசுவாசம் 8. சாந்தம் 9. இச்சையடக்கம் 10. துயரப்படும் சுபாவம் 11. ஆவியில் எளிமை 12. இதய சுத்தம் - கலா. 5 / 22, 23; மத். 5 / 3, 4, 8

## ஜெபம் - 3

## 4 வலுசர்ப்பங்கள் மேல் வெற்றி தாரும்

1. **சிங்கம் போன்ற ஆவி :** - இதன் கழுகின் செட்டைகளின் இறகுகள் பிடுங்கப் படுவதாக: மனுஷனைப் போல பேசி வஞ்சிக்கிற இதன் கிரியைகள் அழிவதாக. (தானி 7/3,4)
2. **கரடி போன்ற ஆவி :** (தானி 7/5) - எலும்புகளுக்கு விரோதமான, மாம்சத்துக்கு விரோதமான இதன் செயல்கள் அழிந்து போவதாக.
3. **சிவிங்கி போன் ற ஆவி :** (தானி 7/6) இதன் பறக்கும் வல்லமைகள் அழிவதாக. இதன் 4 தலைகள் நசுங்குவதாக.
4. **வேற்றுருவ ஆவி :** (தானி 7/7, 8) - இதன் இருப்புப் பற்கள் பிடுங்கப் படுவதாக. இதன் 10 கொம்புகள் விழுவதாக; சின்னக் கொம்பு விழுவதாக.
5. இந்த ஆவிகளுக்கு விரோதமாக அக்கினி நதி கடந்து செல்வதாக - தானி 7/10
6. கர்த்தருடைய தூதர்கள் கடந்து வந்து யுத்தம் செய்வார்களாக.

## ஜெபம் -4

## வலுசர்ப்பத்தின் மேலே வெற்றியருளும்

1. வலுசர்ப்பத்தைப் பாதங்களின் கீழாக்கும் - வெளி 12/1.
2. வலுசர்ப்பத்தை மிதிக்கப்பண்ணும் - சங். 91/13.
3. வலு சர்ப்பத்தை நசுக்க உதவும் - ரோமர் 16/10
4. 7 தலைகள் நசுங்குவதாக.
5. 10 கொம்புகள் பிடுங்கப்படுவதாக.
6. 7 முடிகள் விழுவதாக.
7. வாயினின்று நதி போலே ஊற்றும் வெள்ளம் அழிவதாக. - வெளி. 12/15.
8. அக்கினி நதி சுட்டெரிப்பதாக - தானி 7/10
9. மிகாவேலையும் அவனைச் சேர்ந்த தூதர்களையும் அனுப்பும் - வெளி 12/7.
10. இருப்புக்கோல் வல்லமை செயல்படுவதாக. - வெளி 2/27.
11. விடிவெள்ளி நட்சத்திர வல்லமை செயல்படுவதாக - வெளி 2/28.

# புதியவெப்ஸைட்

I 1. **VISIT OUR NEW WEBSITE**
(எங்கள் புதிய வெப்ஸைட்டை அணுகவும்)

2. **WEBSITE ADDRESS IS www.hosannahchurch.org**
(இணையதள முகவரி : www.hosannahchurch.org)

3. **FEATURES INSIDE** (உள்ளே)

1. PRAYERS IN ENGLISH (ஆங்கிலத்தில் ஜெபங்கள்)
2. PRAYERS IN TAMIL (தமிழில் ஜெபங்கள்)
3. DAILY BREAD (ENG) (அனுதின மன்னா - ஆங்கிலம்)
4. YOUTH PAGE (வாலிபர் பகுதி - ஆங்கிலம்)
5. MESSAGE FOR THE WEEK (வார செய்தி - ஆங்கிலம்)
6. THOUGHT FOR TODAY (இன்றைய சிந்தனை துளிகள் - ஆங்கிலம்)
7. PROMISE GALLERY (ENG) (வாக்குத்தத்தங்கள் - ஆங்கிலம்)
8. PROPHETIC PAGE (தீர்க்கதரிசன பக்கம்)
9. PRAYER POINTS (ஜெபக்குறிப்புகள்)
10. FREQUENTLY ASKED QUESTIONS
(அடிக்கடி கேட்கப்படும் கேள்வியும் பதிலும்)

---

FATHER SON HOLY SPIRIT PANAGUDI HOSANNAH CHURCH

PRAY TO GOD KNOW GOD LOVE GOD LOVE MAN KNOW MAN PRAY FOR MAN

**Dr. பிரின்ஸ்டன் ஜாய்,** M.B.B.S.,
**Dr. சூசன் பிரின்ஸ்டன்,** M.B.B.S.,
ஓசன்னா ஆலயம், **ஜாய் ஆஸ்பத்திரி,**
**பணகுடி - 627 109, தமிழ்நாடு.** & : (954637) 245273
**WEB:** www.hosannahchurch.org